DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.IV, VELLORE.

CC.No.285/2023

Deposition of PW1 witness for Prosecution

Name : செல்வரத்தினம்
Father's Name : மனோகரன்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age : 42

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 on the 21st day December of 2023.

**<u>முதல் விசாரணை தொடங்கிய நேரம்–12.33 P.M</u>**

எதிரி ஆஜர்.

1. நான் எண்.745, எஸ்.எல்.ஆர்.கேம்ப், அப்துல்லாபுரம் என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் எலக்டீரிசியனாக வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன மகேந்திரன் எங்கள் கேம்பில் வசித்து வருகிறார்.

2. கடந்த 09.03.2022 அன்று இரவு 7.30 மணிக்கு நான் கடைக்கு செல்வதற்காக எங்களது முகாமிலிருந்து மேல்மொணவூர் செல்வதற்காக தேசிய நெடுஞ்சாலை வழியாக செல்லும்போது மோகன் (எ) மகேந்திரன்

ரோட்டை கடக்க முயலும்போது சேலம் அரசு பேருந்து 2292 அவர்மீது மோதி விபத்து ஏற்பட்டது. தலையில் இடது பக்கத்தில் காயம் ஏற்பட்டு நினைவில்லாமல் இருந்தார்.

3. சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன். உடனே கும்பல் சேர்ந்து விட்டதால் பேருந்தின் ஓட்டுநரை நான் பார்க்கவில்லை. பின்பு காயம்பட்டவரை ஆம்புலன்ஸ் மூலம் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அன்றே சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக கேள்விபட்டு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். பிரேத பரிசோதனையின் போது உடனிருந்தேன். இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். (அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

**4.** விபத்து நடந்த இடத்தில் சாலையை கடப்பதற்கு பாதைவழி இல்லை என்றால் சரிதான். இரவு நேரம் என்பதால் வெளிச்சம் கிடையாது என்றால் லைட் வெளிச்சம் இருக்கும். விபத்து யாருடைய அஜாக்கிரதையால் நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் மேற்படி முகாமில் தலைவர் என்பதால் இறந்து போன நபருக்காக நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>–இல்லை**

**<u>விசாரணை முடிந்த நேரம்</u> –12.42 P.M**